PR/2018/15/T

# ஜப்பான் தூதரகம்

இல. 20, ஸ்ரீமத் ஆர்.ஜி. சேனானாயக்க மாவத்த, கொழும்பு 7, இலங்கை

தொலைபேசி: 94-11-269-3831~3, தொலைநகல் : 94-11-269-8629

மின்னஞ்சல்: cultujpn@sltnet.lk

மே 01, 2018

ஊடக அறிக்கை

**பேராசிரியர் கார்லோ பொன்சேகாவிற்கு புகழ்மிக்கதோர் கௌரவம் வழங்கிய ஜப்பானிய அரசாங்கம்**

2018 ஏப்ரல் 29 அன்று ஜப்பானிய அரசாங்கம், "உதய சூரியன் , பொற்கதிர்களுடன் கூடிய கழுத்துப் பட்டி" கொண்ட தன்னுடைய அதியுயர் கௌரவத்தை ஜப்பானியக் கலாசாரத்தை இலங்கையில் பிரபல்யப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கிய பேராசிரியர் கார்லோ பொன்சேகாவிற்கு வழங்குவதாக அறிவித்தது.

ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் உயர் திரு. தாரோ கோனோ, ஏப்ரல் 29ல் வெளியான அறிவிப்பு தொடர்பாக அனுப்பி வைத்திருந்த வாழ்த்துச் செய்தியில் , ***உங்களது மிகச் சிறப்பான பங்களிப்பினை அங்கீகரிக்கும் வகையில் "உதய சூரியன் , பொற்கதிர்களுடன் கூடிய கழுத்துப் பட்டி" கௌரவம் வழங்கப்பட்டமை தொடர்பாக எனது உளப்பூர்வமான வாழ்த்துக்களை ஏற்றுக்கொள்ளுங்கள்.தொடர்ந்தும் உங்களது நல் ஆரோக்கியத்திற்காகவும் மகிழ்ச்சிக்காகவும் எனது வாழ்த்துக்கள்" எனத் தெரிவித்துள்ளார்.***

இலங்கையிலுள்ள மிகச் சிறந்த மருத்துவர்களில் ஒருவரான பேராசிரியர் கார்லோ பொன்சேகா, 2010ம் ஆண்டில் ஜப்பானிய இலங்கை நட்புறவு கலாசார நிதிய விருதுகள் குழுவின் இணைத் தலைவராக நியமிக்கப்பட்டிருந்தார். இந்தக் குழுவிற்கான அவரது தலைமைத்துவம் மற்றும் பங்களிப்பு காரணமாக புதியதும் மாற்றமுறுவதுமான கலாசார சூழ்நிலைக்கு மத்தியிலும், இலங்கையிலுள்ள மிகவும் தனிச் சிறப்பு வாய்ந்த கலாசார விருதுகள் என்ற நற்பெயரைக் கட்டியெழுப்புவதற்கும் அதனைத் தொடர்ந்து பேணிச்செல்வதற்கும் கலாசார நிதிய விருதுகளால் முடியுமாக இருந்தது.

1993ல் ஸ்தாபிக்கப்பட்ட ஜப்பானிய இலங்கை நட்புறவு கலாசார நிதிய விருதுகள் (புன்கா விருது) இலங்கையிலுள்ள மிகவும் புகழ்மிக்க விருதுகளிலொன்றாக திகழ்கின்றது. இது அதீத ஆற்றல்மிக்க தமது தொழில்சார் வாழ்வின் நடுப்பகுதியிலுள்ள இலங்கை கலைஞர்களை ஊக்குவித்து, பிரபல்யப்படுத்துவதை நோக்காகக் கொண்டுள்ளது. வருடந்தோறும் கலாசார நிதியத்தால் புன்கா விருது வழங்கப்படுவதுடன் , இவ்விருது பல கலைஞர்கள் தமது

ஆற்றல்களை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு உதவியுள்ளது. ஜப்பானிய இலங்கை நட்புறவு கலாசார நிதிய விருதுகளின் வளர்ச்சிக்காக பேராசிரியர் கார்லோ பொன்சேகாவின் நீடித்து நிலைக்கின்ற அர்ப்பணிப்பானது உயர்வாக பாராட்டப்படுகின்றது.

*******************************************************

மேலதீக விபரங்களுக்காக கலாசார பகுதியை தயதுசெய்து தொடர்புகொள்ளுங்கள்
தொலைபேசி: 011-269-3831~3 (ext.227)